**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 130/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.6 |
| Name : | **திரு. சிவக்குமார்** |
| Father's Name/Husband Name: | **திரு. சின்னசாமி** |
| Village : | குன்னம் |
| Taluk : | **குன்னம்** |
| Age : | 37 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 05.08.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரிகள் 1,2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக பணி புரிகிறேன். ப.சா.9 சோலைக்கண்ணு என்பவரை தெரியும். எதிரி மனோஜ்குமார் என்பவரை தெரியாது. என் முன்னிலையில் போலிசார் யாரையும் கைது செய்யவில்லை, வாக்குமூலம் ஏதும் பெறவில்லை மற்றும் பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், கடந்த 13.09.2017 அன்று மதியம் 14.45 மணியளவில் போலிசார் என் முன்னிலையில் கைது செய்தனர் என்றும், அவர் தானாக முன்வந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து கொண்டனர் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் சாட்சி சோலைக்கண்ணும் சாட்சிகளாக இருந்து கையொப்பமிட்டோம் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து கைப்பற்றுதல் மகஜர் மூலமாக சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் சாட்சி சோலைக்கண்ணும் சாட்சிகளாக இருந்து கையொப்பமிட்டோம் என்றும், தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிர் தரப்பு குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். கையொப்பமிட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/- xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.